செ.வெ.எண்.32 நாள்.12.02.2017

திருநெல்வேலி, கொக்கிரகுளம், தாமிரபரணி நதிக்கரையில் நெல்லை முகநூல் நண்பர்கள் குழுவின் சார்பில் மரக்கன்றுகள் நடும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

--------

திருநெல்வேலி, கொக்கிரகுளம், தாமிரபரணி நதிக்கரையில் நெல்லை முகநூல் நண்பர்கள் குழுவின் சார்பில் மரக்கன்றுகள் நடும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் (12.02.2017) மரக்கன்றுகளை நடவு செய்து, துவக்கி வைத்தார்கள்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர்அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

நெல்லை முகநூல் நண்பர்கள் குழுவின் சார்பில், தாமிரபரணி நதிக்கரையில் இன்று 100 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள சீமை கருவேல மரங்கள் சில மாதங்களுக்கு முன்பு அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அகற்றப்பட்டுள்ளது. அப்பகுதியில் இன்று மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. மேலும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையின் உத்தரவின்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சீமை கருவேல மரங்கள் வேருடன் அகற்றப்படும் பணிகள் நடைபெற்று வருகிறது. அப்பகுதிகளில் இதுபோன்று மரக்கன்றுகள் நடவுசெய்து, மரக்கன்றுகளை பராமரிக்க தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் முன்வர வேண்டும். மேலும், தனியார் நிலங்களில் உள்ள சீமை கருவேல மரங்களினால் ஏற்படும் பாதிப்புகளை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் முகநூல் நண்பர்கள் குழுவினர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமாக கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.